பதிவு எண். ம. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Orgau of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: புரட்டாசி 19 (5—10—71) செவ்வாய் வெளியூர்: புரட்டாசி 20 (6—10—71) புதன் [இதழ்: 93

யாராலும் இந்த அரசை ஏமாற்ற முடியாது

விவசாயிகளுக்குச் சேர வேண்டிய நிலத்தை சேர்த்தே தீருவோம்

தஞ்சைத் தரணியில் கலைஞர் சூளுரை

தஞ்சை, அக். 5 –

"வலிவலமாகட்டும் – புலிவலமாகட்டும் – யார் எந்தப் பூனை வடிவம் போட்டு வந்தாலும் நம்மை ஏமாற்றிவிட முடியாது; இது காமராசர் ஆட்சி அல்ல – கழகத் தொண்டன் கருணாநிதியின் ஆட்சி!

"கல்லூரி பெயரால் – தனிப்பட்டவர்கள் பெயரால் – அண்ணன், தம்பி, மற்றும் பிறந்த குழந்தை, பிறக்கப் போகும் குழந்தை, வேலைக்காரர்கள் ஆகியோர் பேரால் எழுதி வைத்துக்கொண்டு யாரெல்லாம் ஊரை ஏமாற்றுகிறார்கள் என்பது நமக்குத் தெரியும்.

"என்ன ஏமாற்று வித்தைகள் புரிந்தாலும், விவசாயிக்குச் சேரவேண்டிய நிலத்தைச் சேர்த்து முடிக்கின்ற காரியத்தைக் கழக அரசு செய்தே தீரும் என்பதை அவர்கள் உணர வேண்டும்.

"தஞ்சை மாவட்டத்தில் குடியிருப்பு மனைகளை ஏழைகளுக்குச் சட்டத்தின் மூலம் பட்டா செய்து கொடுத்துள்ளோமே – 'முற்போக்கு' என்று பேசும் காமராசர் இதை ஆதரித்தாரா?

"கடந்த தேர்தலின்போது காமராசர் என்ன சொன்னார்? – 'வடக்கே இந்திரா ஆட்சியும், தமிழ்நாட்டில் கழக ஆட்சியும் பதவிக்கு வந்தால் சொத்துரிமை பறிபோகும்' 'என்று இராஜாஜியுடன் கூடச் சேர்ந்துகொண்டு கூறினார்!

"இன்று, 'அடிப்படைச் சொத்துரிமை நீக்கப்படுவதை ஆதரிப்போம்' என்கிறார்; 'இந்திராவின் கொள்கைகளை ஆதரிபபோம்' என்று இன்று பேசும் காமராசர், கொள்கைக் குழப்பத்தில் ஆழ்ந்திருக்கிறாரா – போலிவாதம புரிகிறாரா என்பது நமக்குத் தெரியவில்லை!

"முற்போக்கு என்றால் பாராட்டவேண்டிய காமராசர், 'கழக அரசை வெளியேற்ற – வீழ்த்த – படை தயார்' என்கிறாரே – இது ஏன்?

"காமராசரைப் போன்ற வயதான தலைவர்கள் கட்சியைவிட்டு விலக வேண்டும் – என்று தாரகேசுவரி சின்கா கூறியுள்ளார்; அங்கே அப்படி காமராசருக்கு எதிர்ப்பு உருவாகிக் கொண்டிருக்கிறது!

"வீட்டுக்குள்ளே குட்டு வாங்கிக் கொண்டுவிட்டு காமராசர், வெளியிலே வந்து – அங்கே மதிப்பில்லை என்பதால் எழுகின்ற கோபத்தை – கழக ஆட்சியின்மீது காட்டி வருகிறாரே தவிர, வேறில்லை!"

இவ்வாறு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள், தஞ்சையில் நடந்த மாபெரும் கழகப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

நெஞ்சைவிட்டு நீங்காத நினைவு

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:—

"இதே தஞ்சையில் அண்ணாவின் 50-வது பிறந்த நாளை நாம் கொண்டாடியது நமக்குப் பசுமையாக நினைவில் இருக்கிறது; பீரோ–மேசை–நாற்காலி என்று அண்ணா பயன்படுத்தக்கூடிய 50 பொருட்களை -- அவர் விரும்பாதபோதும்கூட -- கழகத் தோழர்களாகிய நாம் வழங்கினோம்! இந்த நினைவுகள் 13 ஆண்டுகளாகியும் நமது நெஞ்சைவிட்டு அகலாது நிற்கின்றன.

நாம் நடக்கும்போதும் -- உறங்கும்போதும -- விழித்து எழும் போதும், 'அண்ணா வழியே நம் வழி' என்றுதான் உச்சரித்து வருகிறோம்.

கழக அரசை நடத்துகின்ற நாங்கள், எங்களுடைய ஒவ்வொரு மணியினையும், 'அண்ணன்' என்கின்ற கண்ணாடியில்தான் பார்த்துக்கொள்கிறோம்.

இப்படி அண்ணா, நம் நினைவை விட்டு நீங்காத நாதமாக -- உணர்ச்சி அலைகளாக -- இரத்த நாளங்களின் சுழற்சியாக -- உயிர்த் துடிப்பாக -- ஊனோடும் உயிரோடும் கலந்து உள்ளார்!

எதிரிகள் ஏசினாலும் பேசினாலும் -- இழிமொழி கொட்டினாலும் கவலைபடாமல், அலட்சியச் சிரிப்பு ஒன்றை உதிர்த்துவிட்டு, 'பயணத்தை நடத்து தம்பி' என்று அண்ணா சொன்னார்; அதையே தாரக மந்திரமாக ஏற்றுச் செயல்பட்டு வருகிறோம்!

மாற்றாரைக் காமராசர் மதிக்கும் பண்பு இதுதானா?

நாம், மாற்றாரை மதிப்பதில்லை -- என்று காந்தி பிறந்த நாளில் காமராசர், சென்னையில் பேசியிருக்கிறார்.

முன்பு இரஷ்யாவுக்குச் சென்று திரும்பிய காமராசர், அண்ணாவையும் அவரது தம்பிகளையும -- பிறவி குறித்தே இழித்துப் பேசினாரே -- அதுதான் மாற்றாரை மதிக்கும் பண்பா?

ஆனால், அத்தனை இழிமொழிகளையும் கேட்ட பின்புதான், 'மாற்றான் தோட்டத்து மல்லிகையும மணக்கும்; மறப்போம் -- மன்னிப்போம்' என்றுதான் அண்ணா கூறினார்.

அத்தகைய அன்பு மொழியை -- பண்பு மொழியை -- பொன்மொழியை நாம் மறவாது கடைப்பிடித்து வருகிறோம்!

பிளவுபடுத்த முயற்சிக்கிறார் -- ஏமாந்தே தீருவார்

இன்று காமராசர், புதிய கனவு ஒன்று கண்டுவருகிறார்; முற்போக்குக் கூட்டணியில் உள்ள கட்சிகளைப் பார்த்து, 'உங்களுக்குத் தன்மானமில்லையா' என்று கேட்டுப் பிளவுபடுத்த முயற்சி செய்கிறார்.

இப்படிப்பட்ட வாய் ஜாலத்தால் கூட்டணியைப் பிளக்க முடியும் என்று காமராசர் நினைத்தால் அவர்தான் ஏமாறுவார்!"

நாடாளுமன்றக் கூட்டம் -- நவ. 15-ல் துவங்குகிறது

புதுடில்லி, அக். 5—

மக்கள் சபையின் மாரிக் காலத் தொடர்க் கூட்டம் நவ. 15-ம் நாள் துவங்கும்.

இக்கூட்டத் தொடர், டிச. 22-ம் நாள் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடுப்பு எரிக்கப் புதிய எரிபொருள்

தஞ்சை, அக். 5—

உணவுக் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான நவீன அரிசி ஆலை, அடுப்பு எரிப்பதற்காகப் புதிய எரிபொருள் ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறது.

அந்த எரிபொருளுக்கு 'அல்லேட்' என்று பெயர்; அரிசி உமியைக்கொண்டு இந்த எரிபொருள் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இயந்திர உதவிகளைக் கொண்டு மூங்கில் துண்டு வடிவில் அந்த எரிபொருள் தயாரிக்கப்படுகிறது.

இந்த இயந்திரம், மணிக்கு 250 கிலோ 'அல்லேட்' தயாரிக்கும்.

எதிர்ப்பாளர்கள் நால்வருக்குப் பதவி பறிபோகிறது

நாகாலாந்து முதலமைச்சரின் பழிவாங்கும் போக்கு?

கோகிமா, அக். 4—

நாகாலாந்து முதலமைச்சர் ஒகி ஷேசேமா, தமது அமைச்சரவையிலிருந்து நால்வரை, பதவியிலிருந்து விலகுமாறு கோரியிருக்கிறார்.

ஆளும் கட்சியான நாகாலாந்து தேசிய இயக்கத்தைச் சேர்ந்த சில அமைச்சர்ளும் -- உறுப்பினர்களும், 'தலைமையில் மாற்றம் செய்யப்பட வேண்டும்' என்று கோரிவந்ததற்கு எதிராக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறதாம்.

கடந்த சட்டமன்றக் கூட்டத்தின் போது ஆளும் கட்சி, முதலமைச்சர் சேமாவைப் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டிருந்தது.

தஞ்சைப் பெரிய கோவிலுக்குள் இராசராச சோழன் சிலை

'விரைவில் அமைக்கப்படும்' என முதலமைச்சர் அறிவிப்பு

தஞ்சை, அக். 5—

தஞ்சைப் பெரிய கோவில் என்று அழைக்கப்படும் பிரகதீசுவரர் ஆலயத்தை முதலமைச்சர் கருணாநிதி அவர்கள், அமைச்சர்கள் ப. உ. சண்முகம்--அன்பில் தர்மலிங்கம்--சி. பா. ஆதித்தனார்-- மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோருடன் சுற்றிப்பார்த்தார்.

இராசராச சோழன் சிலை இப்போது கோவிலுக்கு வெளியே வைக்கப்பட்டுள்ளது; 'இச்சிலையைக் கோவிலுக்கு உள்ளே எந்த இடத்தில் வைக்கலாம்' என்பதற்கான வாய்ப்புக்களை முதலமைச்சர் ஆராய்ந்தார்.

தஞ்சையில் நடந்த கழகப் பொதுக்கூட்டத்தில் கலைஞர் பேசுகையில், தஞ்சைப் பெரிய கோயிலில் இராசராச சோழனின் சிலையை எந்த இடத்தில் அமைக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ அந்த இடத்தில் விரைவில் அமைக்கப்படும்' என்று அறிவித்தார்.

குழந்தைகட்குச் சத்துணவு வழங்கும் திட்டம்

ஐந்து வயதுக் குழந்தைகளுக்கும் விரிவுபடுத்த முயற்சி

தஞ்சை நகராட்சி வரவேற்பில் முதல்வர் கருணாநிதி தகவல்

தஞ்சாவூர், அக். 5—

"மூன்று வயது வரையிலான குழந்தைகளுக்கு சத்து மிக்க ரொட்டி வழங்கும் திட்டத்தை, 5 வயது வரையில[illegible] குழந்தைகளுக்கும் விரிவுபடுத்துவது குறித்துத் தமி[illegible] அரசு மத்திய அரசுடன் கடிதப் போக்குவரத்து நடத்[illegible] வருகிறது" என்று முதலமைச்சர் இங்கு தெரிவித்தார்.

தஞ்சை நகராட்சியில் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் துவக்கி வைத்தார்.

முதலமைச்சருக்கு நகராட்சிமன்றம வரவேற்பு அளித்தது; அதுபோது அவர், 'சத்துணவு வழங்கும் இத்திட்டம் சில நகராட்சிப் பகுதிகளில் மட்டுமேதான் செயல்பட்டுவருகிறது' என்று கூறினார்.

நகராட்சித் தலைவர் திரு. எஸ். பெத்தண்ணன், தமது வரவேற்பு உரையில், 'சிவகங்கை தோட்டம் ஏராளமான பயணிகளைக் கவர்ந்[illegible] வருவதால், அதை மேலும் [illegible] படுத்த மாநில அரசு நிதி[illegible] செய்யவேண்டும்' என்று கே[illegible] கொண்டார்; 'குடிசை மா[illegible] திட்டத்தை இந்த மாவட்ட[illegible] கும் விரிவுபடுத்த வேண்டும்[illegible] றும் அவர் கேட்டுக்கொ[illegible]

...மனப் புரட்சிகளை உருவாக்கியவர் காந்தியார்

அவர் கண்ட கனவை நனவாக்கப் பாடுபடுகிறோம்

காந்தி பிறந்த நாள் விழாவில் நாவலர் நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, அக். 5—

"உள்ளத்தால் ஏற்படக்கூடிய புரட்சிகளை மகாத்மா காந்தி ஏற்படுத்தினார்; சாஸ்திரத்தின் பேரால் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட மக்களையெல்லாம் -- தீண்டத்தகாதவர்கள் என்று ஒதுக்கப்பட்டவர்களையெல்லாம் விழிப்புக்கொள்ளச் செய்யும் பணியில் அவர் முன் நின்றார்; சிற்றூர்களில் கிடந்த மக்களெல்லாம் வசதியாக -- தன்னிறைவுடன் வாழ -- மனநிறைவு கொண்ட வாழ்வை அமைத்துக்கொள்ள 'கிராம ராஜ்ய'க் கனவுகள் கண்டார்!

"அத்தகைய காந்தியாரின் கொள்கைகளை நாம் நிறைவேற்றிவைப்பதில் -- ஏழை எளியவர்களின் வாழ்வு சிறக்கப் பாடுபடுவதில் -- மனநிறைவு கொண்ட வாழ்வு ஏற்படத்தக்க அளவுக்குத் திட்டங்கள் அமைத்துச் செயலாக்குவதில் அவர் காட்டிய வழியே செல்லுகிறோம்"

என்று, கழகப் பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், காந்தியார் பிறந்த நாள் விழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்; மேலும் அவர் பேசியதாவது:—

"நினைவில் வைத்துக் கொண்டாடக்கூடிய பிறந்த நாள் ஒரு சிலருக்குத்தான் வரும்!

உலகத்திலே கோடானுகோடிப் பேர் பிறக்கிறார்கள்; எல்லோருக்கும் பிறந்த நாள் வரும்;

அந்தப் பிறந்த நாட்களெல்லாம் ஆண்டுகளின் கணக்கீடு!

ஆனால், நினைவில் வைத்துக் கொண்டாடக்கூடிய காந்தியடிகளின் பிறந்த நாள், சமுதாயத்தின் மதிப்பீடு!

இந்த மதிப்பீடு, மனிதப் பண்புகளை வளர்ப்பதற்கு உதவுகிறது! உலகப் பெருமை பெற்றவர்களின் பிறந்த நாட்களையெல்லாம் இப்படி நினைவில் வைத்துக் கொண்டாடுவதால், மனிதப் பண்புகள் மாண்பு பெறுகின்றன!

இயேசுவின் பிறந்த நாளை இப்படி நினைவில் வைத்துக் கொண்டாடுவதுண்டு!

நபிகளின் பிறந்த நாளையும் நினைவில் நிறுத்திக் கொண்டாடுகிறார்கள்!

புத்தரின் பிறந்த நாள் கொண்டாடப்படுகிறது!

இப்படி ஒரு சிலருக்குத்தான் நினைவில் நிறுத்திக் கொண்டாடும் பிறந்த நாட்கள் வருகின்றன!

அலெக்சாண்டருக்கும் பிறந்த நாள் உண்டு -- அவன் வீரத்தைத்தான் பேசுவார்கள்!

ஈன்ஸ்டீன் பெரிய விஞ்ஞானி -- அவருக்கும் பிறந்த நாள் உண்டு; ஆனால், அவருடைய விஞ்ஞான அறிவுதான் கொண்டாடப்படுகிறது -- பிறந்த நாளுக்கு விழா இல்லை;

இப்படி, பிறந்த நாளுக்கு விழா எடுக்கின்ற அளவுக்குக் காந்தியடிகள் நம் நினைவில் நிற்பதற்குக் காரணம், அவர் இந்தத் தாழ்வுற்றுக் கிடந்த சமுதாயத்திற்கு வாழ்வளித்துப் பெருமை சேர்த்தவர் என்பதுதான!

இந்த நாட்டின் அரசியல் நெறியைச் சீர்படுத்தியவர் காந்தி.

அந்த நேரத்தில், அந்நியரிடமிருந்து நாட்டுக்கு விடுதலை பெறும் பணியில் இரண்டு போக்குகள் இருந்தன; 'தீவிரவாதிகள்' என்று -- வெடிகுண்டை விடுதலை வளர்ச்சிக்கு நம்பினவர்கள் ஒரு சாரார்; பகவத் சிங் -- சுகதேவ் -- இராஜகுரு போன்றவர்கள் தீவிர அணியில இருந்தார்கள்!

இன்னொரு சாரார், வெள்ளைக்காரனுக்கு அடிபணிந்து நடந்து -- அவனுக்கு இசைந்து நடந்து ஒரு பாறறத்தைக் காண நினைத்தவர்கள் -- இவர்கள் மிதவாதிகள்!

இந்த இரு சாராரிடமிருந்தும் ஒரு புதிய வழியை -- அறப்போர் வழியை -- கையாண்டு, வீழ்ச்சியுற்றுக் கிடந்த நாட்டை எழுச்சியுறச் செய்த பெருமை காந்தியடிகளுக்கு உண்டு!

அவர் தம்முடைய கருத்துக்களையும் கொள்கைகளையும் அந்த நேரத்தின் -- சூழ்நிலையின் மாறுபாட்டுக்கு ஏறபத்தான் வகுத்துக் கொண்டிருந்தார்; இதை அவரே —தாம் எழுதிய ஒரு கட்டுரையில்— தெளிவுபட எழுதியிருக்கிறார்:—

"நான் எதையும் சிந்திப்பதற்கு முன்பு -- எழுதுவதற்கு முன்பு, அந்தச் சிந்தனையைப் பற்றி முன்பு என்ன எழுதியிருந்தேன் என்பதை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வதில்லை; நிலைமைகள்-- சூழ்நிலைகளுக்கேற்பக் கருத்துக்களும் மாறக்கூடியனவே! அந்த மாறுபாட்டிற்கு, அந்தந்த நேரத்தில்--சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள பிரதிபலிப்புகளே அமைந்திருக்க முடியும்."

இப்படி அவர் எழுதியுள்ளதைப் போலத்தான், தமிழ்நாட்டில் இன்றையச் சூழ்நிலையில் மது விலக்கு ரத்தாகி இருக்கிறதே தவிர, இதுவே நிரந்தரமானதல்ல என்பதையும் இந்த விழாவில் நாம் தெரிவித்துக் கொள்வோம்."

தமிழ்நாட்டில் கண்காட்சி இரயில்

சென்னை, செப். 30—

இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்கள் பற்றியும் — பாதுகாப்புத் துறை பற்றியும் விளக்கி உரைக்கும் புகைப்படக் கண்காட்சி ஒன்றைத் தாங்கிய இரயில் பெட்டி ஒன்று, தமிழ்நாட்டில் அக்டோபர் 15-ஆம் நாள் முதல் சுமார் ஒரு மாத காலத்திற்கு சுற்றுப்பயணம் செய்ய இருக்கிறது.

'நமது இந்தியா' என்ற பெயர் கொண்ட இந்தக் கண்காட்சி இந்த இரயில் பயணம் செய்யும் ஒவ்வொரு நிலையத்திலும் இரண்டு நாட்களுக்குப் பொதுமக்களுக்குக் காட்டப்படும்; இது தவிர, சில திரைப் படங்களும் காட்டப்படும்.

150-க்கு மேற்பட்ட புகைப் படங்களையும் --- விளக்கவுரைகளையும் கொண்ட இக்கண்காட்சி, நமது ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் நாடு அடைந்துவரும் முன்னேற்றத்தை விளக்கி உரைக்கும்.

பாதுகாப்புத் துறையில் நமது தேவைகள் பற்றியும், இத்துறையில் இதுவரை ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் பற்றியும் பல விளக்கங்களை இக்கண்காட்சி கொண்டிருக்கிறது. இந்த இரயில் பெட்டி தங்கும் ஊர்களில், மாலை 3 மணி முதல் இரவு 7 மணிவரை கண்காட்சி பொதுமக்களுக்குத் திறந்து வைக்கப்படும்; இதன் பின்னர், இரயில்வே நிலையத்தில் செய்தி விளக்கப் படம் காட்டப்படும்; கட்டணம் ஏதும் வசூலிக்கப்பட மாட்டாது.

மத்திய அரசின் காட்சி விளம்பரப் பிரிவு, இந்த நகரும் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்திருக்கிறது.

கண்காட்சி இரயில் தங்கவிருக்கும் ஊர்களும், நாட்களும் வருமாறு:—

அக். 15: சென்னையிலிருந்து புறப்பாடு; 16, 17: சேலம்; 18, 19: அனங்கூர்; 21, 22: பெருந்துறை; 23, 24: விசயமங்கலம்; 26, 27: திருப்பூர்; 28, 29: சோமனூர்; 30, 31: சூலூர் ரோடு.

நவம்பர் 2, 3: பீளமேடு; 4, 5: கோயம்புத்தூர் வடக்கு; 7, 8: போத்தனூர்; 9, 10: மதுக்கரை; 12: கோயம்புத்தூர் நகரம்.

கண்காட்சி வண்டி நவ. 13-ந் தேதியன்று சென்னை வந்து சேரும்.

மின் விசைக் கட்டணம்

படிப்படியாக உயர்த்த நிபுணர் குழு பரிந்துரை

சென்னை, செப். 30—

தமிழ்நாட்டில் வேளாண்மைப் பணிகளுக்கான மின்விசைக் கட்டணத்தைப் படிப்படியாக அதிகரிக்குமாறு மின் விசைக் கட்டண நிபுணர்கள் குழு பரிந்துரை செய்திருக்கிறது.

டாக்டர் பி. நடராசன் தலைமையில் இக்குழுவை தமிழக அரசு 1969 டிசம்பரில் நியமித்தது.

கிராமங்களில் மின் விசை வசதிக்காகப் போடப்பட்ட பெரும் முதலீட்டின் மீதான வட்டிச் செலவைச் சமாளிப்பதற்கு மின்சார வாரியத்துக்கு வசதி செய்வதற்கு இக்கட்டண அதிகரிப்பு அவசியமென்று குழு கூறுகிறது.

"யூனிட் ஒன்றுக்கு 19.20 காசு வீதம் அமைந்துள்ளது -- மின் விசை அடக்கச் செலவு; இப்போதைய மின்விசைக் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 9 காசாக இருக்கிறது; இது, மின்விசைக்காகும் செலவை விட 10 20 காசு குறைவு; செலவுக்கும்-- வரவுக்கும் இடையிலுள்ள வேறுபாடு ரூ. 11 கோடி அளவுக்குப் போகிறது" என்று குழு எடுத்துக் காட்டுகிறது.

விவசாயிகளுக்குச் சலுகைகள்

"விவசாயப் பணிகளுக்கான மின் விசைக் கட்டணத்தைச் சீரமைப்பதற்கான நியாயம் இருப்பினும், விவசாயப் பணி மின் விசைச் செலவு முழுவதையும் ஈடுகட்டும்படி ஒரேயடியாக ஏற்றிவிடலாகாது" என்றும் குழு சுட்டிக்காட்டுகிறது.

விவசாயப் பணிகளுக்கு குறைந்த கட்டணத்தில் மின்விசை வழங்குவதென்ற அரசாங்கக் கொள்கையைக் குறிப்பிட்டு, விவசாயத் துறையினர் பல சலுகைகள் பெற்றுவருவதை இக்குழு சுட்டிக் காட்டுகிறது.

மின் விசை இணைப்புப் பெற்ற இடங்களில் 40 சதவிகிதமும் மின்விசை 'கிரிட்' உபயோகத்தில் 25 சதவிகிதமும் விவசாயப் பணிகளுக்குத்தான்; கிராமங்கள் மின்விசைத் திட்டத்துக்கு முதலிடம் வழங்குவதன்மூலம், மேலே கண்ட விகிதாச்சாரம் வளர்ந்து கொண்டே வரும்.

கிராம மின்சாரத் திட்டங்களுக்குக் குறைந்த வட்டியிலோ அல்லது வட்டியில்லாமலோ நீண்ட காலக் கடன்களை அரசு வழங்க வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்திருக்கிறது.

"மின்விசை மீதான வரி வருமானங்களை மின்சார வாரியத்துக்கு வழங்க வேண்டும்; இது கிராம மின்விசை திட்டங்களுக்கும் -- மற்ற மின்விசை மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் பயன்படுத்தப் பட வேண்டும்" என்றும் குழு யோசனை கூறியிருக்கிறது.

கிராம மின்விசைத் திட்டம் மாநிலத்தின் பெருநலனுக்கும்-- சமுதாயத்தின் நலனுக்கும் உரியதாகும் என்று கூறிவிட்டு -- கிராமங்களில் மின்விசை வசதி செய்வதிலுள்ள சிரமங்களையும் எடுத்துக்காட்டுகிறது.

இந்தியாவிலேயே முதல் பாம்புப் பண்ணை

சென்னை -- கிண்டியில் அமைக்கப்பட்டது

அமைச்சர் ஓ. பி. இராமன் திறந்துவைத்தார்

சென்னை, அக். 5—

இந்தியாவிலேயே முதன் முதலாக கிண்டியில் அமைக்கப்பட்டுள்ள பாம்புப் பண்ணையை அமைச்சர் ஓ பி. இராமன் திறந்து வைத்தார்.

இந்தப் பாம்புப் பண்ணையைப் பொதுமக்கள் நேரில் சென்று பார்க்கலாம்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஒயிட்டேக்டர் என்பவர், பாம்புகளின் பழக்கவழக்கங்களை அறிவதில் அதிக ஆர்வம் கொண்டவர்; சென்னையிலிருந்து 15 மைல் தூரத்தில் செம்பாக்கம் என்ற இடத்தில் அவர் ஒரு பாம்புப் பண்ணை தொடங்கினார்.

இந்தப் பாம்புப் பண்ணையில் ...00-க்கும் அதிகமான பாம்புகளைப் ...த்து வளர்த்தார்; 40 வகை ... பாம்புகள் இருந்தன; வெளி ...களிலிருந்தும் பல வகைப் ...கள் வரவழைக்கப்பட்டன.

அவர் ... பாம்புப் பண்ணையைக் கண்ட தமிழக அரசு கிண்டியில் உள்ள மான் பூங்கா அருகே ஓர் ஏக்கர் நிலம் ஒதுக்கிக் கொடுத்துள்ளது.

செம்பாக்கத்தில் சிறிய அளவில் இருந்த பாம்புப் பண்ணை இப்போது கிண்டிக்கு மாற்றப்பட்டுள்ளது. இந்தப் பாம்புப் பண்ணைக்கு உலக வனவிலங்கு சங்கம் நிதியுதவி செய்கிறது.

இந்தப் புதிய பாம்புப் பண்ணையை அமைச்சர் ஓ. பி. இராமன் திறந்துவைத்தார்.

தமிழ்நாடு வனவிலங்கு அதிகாரி பி.ஆர். முகமது டஷீர், பாம்புகளைப் பையிலிருந்து திறந்துவிட்டார்.

பாம்புப் பண்ணையில் நல்ல பாம்பு --- கட்டுவிரியன் --- சாரைப் பாம்பு -- அமெரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்ட 'கிறுகிறுப்பை'ப் பாம்பு மற்றும் பல வகைகள் உள்ளன; இதைத் தவிர முதலை, பாம்பு இராணி, மற்றும் பல வகைக... ...ள்ளன.

முஜிபுர் ரகிமானுக்கு எதிராக பொய்ச் சாட்சி

இராணுவ ஆட்சியாளர்கள் ஜோடனை!

கல்கத்தா, அக். 5—

வங்க தேசத் தலைவர் முஜிபுர் ரகிமானுக்கு எத்தகைய தண்டனை விதிக்கப்பட்டபோதிலும் சரி -- அதற்கு ஆதரவாகப் பொதுமக்கள் கருத்தை வெளிநாடுகளில் திரட்டுமாறு தனது தூதரகங்களுக்குப் பாகிஸ்தான் அரசு தாக்கீது பிறப்பித்திருக்கிறது.

இது சம்பந்தமாகப் பத்திரிகைகளிடமும் செல்வாக்கைப் பயன்படுத்துமாறு தூதரகங்களைப் பாகிஸ்தான் அரசு, சுற்றறிக்கை ஒன்றில் கேட்டுக் கொண்டிருக்கிறது.

முஜிபுருக்கு விரோதமாகச் சாட்சியமளிக்கும்பொருட்டு டாக்கா பத்திரிகைகளைச் சேர்ந்த 4 நிருபர்கள்—4 பல்கலைக் கழகப் பேராசிரியர்கள்—இரு பாங்கர்கள்—வங்க அரசாங்க இராணுவ அதிகாரிகள் ஆகியோரை விமானமூலம் மேற்குப் பாகிஸ்தானுக்குக் கிழக்கு வங்க இராணுவ அரசு அனுப்பியிருக்கிறது.

டாக்காவிலிருந்து அவர்களை அனுப்புமுன், அவர்களுக்குச் சாட்சியம் எவ்வாறு கூறவேண்டும் என்பதை இராணுவ அதிகாரிகள் கற்பித்தனர்; அதாவது வங்காளி அல்லாதவர்களைக் கொல்லுமாறு முஜிபுர் நேரில் ஆணையிட்டதாக அவர்கள் கூறவேண்டும்.

சாட்சிகளில் சிலர் டாக்காவுக்குத் திரும்பியிருக்கின்றனர்; மற்றவர்கள் இரகசிய இடம் ஒன்றில் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்; அவர்களது குடும்பத்தினருக்குக்கூட அவர்கள் இருக்கும் இடம் தெரியாது.

"முஜிபுருக்கு எதிராகச் சாட்சியம் கூறவேண்டும்" என்று இராணுவ ஆட்சி தெரிவித்ததைத் தொடர்ந்து பத்திரிகையாளர் பலர் டாக்காவிலிருந்து தப்பி ஓடிவிட்டனர்.

திருப்பதிக்கு மேலும் எக்ஸ்பிரஸ் பஸ்கள்

தமிழ்நாட்டிலிருந்து செல்லும்

அமைச்சர் ச. இராமச்சந்திரன் தொடக்கி வைத்தார்

சென்னை, அக். 4—

தமிழ்நாடு—ஆந்திரம் ஆகிய இரு மாநிலங்களுக்கிடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின் பயனாக சென்னை—திருப்பதிக்கு மேலும் இரண்டு எக்ஸ்பிரஸ் பஸ்களும், சேலம் — திருப்பதி இடையே இரண்டு எக்ஸ்பிரஸ் பஸ்களும், திருப்பத்தூர் — திருப்பதிக்கு ஒரு பஸ்சும், சென்னை—நெல்லூரிடையே ஒரு பஸ்சும் அக். 1 முதல் ஓடத் தொடங்கின.

புதிய பஸ்களை அமைச்சர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள், உயர் நீதிமன்றத்திற்கு அருகிலுள்ள எக்ஸ்பிரஸ் பஸ் நிலையத்தில் துவக்கி வைத்தார்.

விழாவிற்கு போக்குவரத்துத் துணை ஆணையர் திரு. எம். ஜி. இராசாராம் தலைமை வகித்தார்.

"தமிழக அரசு தற்போது 155 எக்ஸ்பிரஸ் பஸ்களை விடுகிறது; இந்த ஒப்பந்தத்தின் பயனாக மேலும் 8 பஸ்கள் விடப்படுகின்றன" என்று அமைச்சர் கூறினார்.

"155 எக்ஸ்பிரஸ் பஸ்கள்மூலம் நாள்தோறும் 66,000 வசூலாகிறது; மேலும் 8 பஸ்களால் இந்த வசூல் ரூ. 69,000-த்தை எட்டும்; இந்த வசூல் ஓர் இலட்சமாக உயர மேலும் பல ரூட்களை உருவாக்க வேண்டியிருக்கிறது" என்றும் அமைச்சர் கூறினார்.

"ஆந்திர மாநிலத்துடன் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது போன்று, மைசூர் மாநிலத்துடனும் ஒப்பந்தம் செய்துகொள்ள இம்மாதம் இரண்டாவது வாரத்தில் இரு மாநிலங்களையும் சேர்ந்த அதிகாரிகள் பேச்சு நடத்துகிறார்கள்" என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

செங்கத்தில் அமைக்கப்படும் அரசுப் பண்ணை

அமைச்சர் ப. உ. சண்முகம் திறந்துவைத்தார்

'வேளாண்மைத் துறையில் பெரும் புரட்சியை ஏற்படுத்தும்' என நம்பிக்கை

வேலூர், அக். 5—

சுமார் 10,000 ஏக்கர் நிலப்பரப்பில் செங்கத்தில் அரசாங்க விதைப் பண்ணையைத் தமிழ்நாடு உணவு – வேளாண்மைத் துறை அமைச்சர் ப. உ. சண்முகம் துவக்கிவைத்தார்.

1974–75-ம் ஆண்டுக்குள் இந்தப் பண்ணையில் சாகுபடி துவங்கிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

செங்கம் பண்ணை, அரசாங்கப் பண்ணைக் கார்ப்பரேஷன் துவங்கியுள்ள பத்தாவது பண்ணையாகும்; மற்ற மத்திய அரசாங்கப் பண்ணைகளைப் போலவே இங்கும் எல்லா சாகுபடி வேலைகள், இயந்திர சாதனங்கள் உதவியால் நடைபெறும்.

சாகுபடி நிலப்பரப்பு முழுவதும் 1974–75-ம் ஆண்டுக்குள் பண்படுத்தப்பட்டு – சாகுபடிக்கு வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முதல் போகத்தில் அதிக விளைச்சல் தரும் சோள ரகம்– பருப்பு வகைகள் – கரும்பு – நெல் முதலியன பயிரிடப்படும்.

இரண்டாவது போகத்தில், பாசனப் பயிராக வேர்க்கடலை – கம்பு – சோளம் – பருத்தி – பருப்பு வகைகள் பயிரிடப்படும்.

இந்தப் பண்ணையில் வேர்க்கடலை – அதிக விளைச்சல்தரும் கம்பு ஆகிய பயிர்களில தரமான விதை உற்பத்தி பெரும் அளவில் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

துவக்க விழாவையொட்டித் தலைமையமைச்சர் இந்திரா காந்தி அனுப்பிவைத்துள்ள செய்தியில், 'நவீன முறைகளில் ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு அரசாங்கப் பண்ணைகள் முன்மாதிரியாக விளங்குகின்றன' என்று குறிப்பிட்டுள்ளார்; 'தரமான விதைகளை வழங்குவதன் மூலம் ஏராளமான நிலங்களில் வேளாண்மை வளர்ச்சிக்கு அவை துணைபுரிகின்றன' என்றார்.

முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் அனுப்பிவைத்துள்ள செய்தியில், 'வேளாண்மை வளர்ச்சிக்கும் உற்பத்திப் பெருக்கத்துக்கும் இந்தப் பண்ணை உதவும்' என்று குறிப்பிட்டிருந்தார்.

அரசாங்கப் பண்ணைக் கார்ப்பரேஷன் தலைவர் திரு. எம். ஆர். கிருஷ்ணா பேசுகையில், 'பெரிய அளவில் நடத்தப்படும் இத்தகைய பண்ணைகள், சிறு விவசாயிகளிடை கூட்டுறவுச் சாகுபடியை ஊக்குவிக்க உதவும்' என்றார்; தரமான விதை உட்பட சாகுபடிக்கு வேண்டிய இன்றியமையாப் பொருள்கள் வசதியாகக் கிடைக்க உதவும்' என்றார்; அவர் மேலும் கூறியதாவது:—

"டிராக்டர்களை ஓட்டுவது–பழுது பார்ப்பது போன்ற பணிகளில் விவசாயிகளுக்கு இந்தப் பண்ணை பயிற்சி அளிக்கும்; தவிர, இதைச் சுற்றிலும் பல்வேறு விவசாயச் சார்புத் தொழில்கள் ஏற்பட உதவும்; ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்

விவசாயத் துறையில் ஒரு மௌனப் புரட்சியை ஏற்படுத்தவும், 'நவீன சாகுபடி முறைகளை விவசாயிகளிடை பரப்பவும் இத்தகைய பெரிய பண்ணைகள் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன."

அமைச்சர் ப. உ. சண்முகம்

பண்ணையைத் துவக்கிவைத்து அமைச்சர் ப. உ. சண்முகம் பேசுகையில், 'இந்தப் பண்ணைக்கு இன்னும் அதிக நிலம் ஒதுக்க மாநில அரசு தயாராக இருக்கிறது' என்றார்; பூச்சி ஒழிப்பு மருந்துகளைத் தெளிப்பதற்காக, இந்தப் பண்ணையில் ஹெலிகாப்டர் விமானப் பிரிவு ஒன்றையும் சேர்க்குமாறு உணவுக் கார்ப்பரேஷனைக் கேட்டுக் கொண்டார்.

மாநில அரசு நடத்தும் பண்ணைகளுக்காக இரஷ்ய ஹெலிகாப்டர்களை வாங்கும் திட்டத்துக்கு மத்திய அரசின் அங்கீகாரம் கோரப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

அமைச்சர் அன்பில் தர்மலிங்கம்

அமைச்சர் திரு. அன்பில் தர்மலிங்கம் பேசுகையில், 'தமிழக அரசு 59 பண்ணைகள் நடத்துவதாகவும், ஒன்று அல்லது இரண்டு பண்ணைகள் நீங்கலாக ஏனைய பண்ணைகள் இலாபகரமாக நடந்து வருவதாகவும் தெரிவித்தார்.

செங்கம் பண்ணைத் திட்டத்தில் மாநில அதிகாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்றும், ஏனெனில் அவர்களுக்குத்தான் இங்குள்ள நிலத்தின் வாகு நன்கு தெரிந்திருக்கும் என்றும் கூறினார்.

"வேளாண்மை விரிவுத் திட்டம் ஒன்றின்கீழ், வடாற்காடு மாவட்டத்திலுள்ள மலைப் பகுதிகளை மேம்பாடு செய்ய மாநில அரசு எண்ணியிருக்கிறது" என்றும் அவர் சொன்னார்.

அமைச்சர் க. இராசாராம்

சுற்றுலா அமைச்சர் க. இராசாராம் அவர்கள், 'நவீன முறைகளைக் கையாண்டு சாகுபடிகளை நடத்த இத்தகைய விரிவுபடுத்தும் பணி அவசியமாகும்' என்றார்.

கட்சிகளை மறந்து பணியாற்றுக!

நகராட்சி உறுப்பினர்கட்கு கலைஞர் வேண்டுகோள்

திருவண்ணாமலை நகராட்சி வைர விழாவில் அண்ணா படத்தைத் திறந்துவைத்து உரை

திருவண்ணாமலை, அக். 4—

"நகராட்சிமன்ற உறுப்பினர்கள், தத்தம் அரசியல் வேற்றுமைகளை மறந்து -- மக்களின் முன்னேற்றத்துக்காக ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்; நகரத்தின் முன்னேற்றமும், மக்களின் வசதிகளும் பெருகவேண்டும் என்பதே நகராட்சி உறுப்பினர்களின் குறிக்கோளாக இருக்கவேண்டும்; அரசியல் கருத்து மாறுபாடுகள் இப்பணிகளுக்குக் குறுக்கே நிற்கக் கூடாது"

என்று முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் இங்கு திருவண்ணாமலை நகராட்சியின் வைர விழாக் கொண்டாட்டத்தையொட்டி, வைர விழா மண்டபத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் கேட்டுக் கொண்டார்.

திரு. முருகையன் எம்.எல்.ஏ. அவர்கள், நகராட்சியின் கடனையும் -- வட்டியையும் ரத்து செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொண்டதைக் குறிப்பிட்டு முதலமைச்சர் கூறியதாவது:—

"மாநில அரசும் இதே நிலையிலேயே இருந்துவருகிறது; மத்திய அரசிடம் இதேபோன்ற கோரிக்கையை மாநில அரசு எழுப்பி வருகிறது; மாநில அரசின் பொருளாதார நிலையும் திருப்திகரமானதாக இல்லை."

அண்ணா படம் திறப்பு

இதற்கு முன்னதாக அறிஞர் அண்ணா அவர்களின் உருவப் படத்தை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

இரா. நெடுஞ்செழியன்

நிகழ்ச்சிக்குத் தலைமைவகித்த உள்ளாட்சித் துறை அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், நகராட்சியின வருமானத்தைப் பெருக்கும் வாய்ப்புக்கள் பற்றி அரசு தீவிரமாகச் சிந்தித்து வருவதாகத் தெரிவித்தார்.

ப. உ. சண்முகம்

வருவாய்த் துறை அமைச்சர் திரு. ப உ. சண்முகம் அவர்கள், முதலமைச்சர் கருணாநிதி அவர்களின் உருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

"அடுத்த மாதத்திற்குள் வட ஆற்காடு மாவட்டத்தில் கிராம மின் வசதித் திட்டம் நிறைவு பெறும்" என்று அமைச்சர் ப. உ. சண்முகம் அறிவித்தார்.

நீண்ட நாட்களாக தொடர்ந்து நகராட்சி உறுப்பினராக இருந்து வரும் பரமசிவம் பிள்ளைக்கு, அமைச்சர் ப. உ. சண்முகம் பொன்னாடை போர்த்தினார்.

நிகழ்ச்சிகள் விவரம்

திருவண்ணாமலை நகராட்சியின் வைர விழாவையொட்டிக் கட்டப்பட்டுள்ள மண்டபத்தை முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் திறந்து வைத்தார்.

விழாவில், அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், ப. உ. சண்முகம், அன்பில் தர்மலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நகராட்சித் தலைவர் இரா. தர்மலிங்கம் எம்.எல்.சி. அவர்கள் முதலமைச்சருக்கும், துணைத் தலைவர் நடராசன் கல்வி அமைச்சருக்கும் வாழ்த்து இதழ்கள் வாசித்தளித்தனர்.

கலைஞருக்கும் -- நாவலருக்கும், திருவண்ணாமலை கோபுரம்போல வெள்ளியால் செய்யப்பட்ட உருவங்கள் பரிசாக அளிக்கப்பட்டன.

நகராட்சி சார்பில் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதிக்கு ரூ. 5,000-மும், அரிமா சங்கச் சார்பில் ரூ. 1,000-மும் வழங்கப்பட்டன.

திருவண்ணாமலையிலுள்ள வேலூர் சாலையில் அமைக்கப்பட்டுள்ள அண்ணா நுழைவு வாயிலை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

உயர்நிலைப் பள்ளி பொன் விழா கட்டடத்துக்கு முதலமைச்சர், அமைச்சர்கள் நெடுஞ்செழியன் -- ப. உ. சண்முகம் -- அன்பில் தர்மலிங்கம் ஆகியோர் முன்னிலையில் அடிக்கல் நாட்டினர்.

பொதுக்கூட்டம்

திருவண்ணாமலை அண்ணா சிலைக்கு எதிரில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

திரு. இரா. தர்மலிங்கம் எம்.எல்.சி. தலைமைதாங்கினர்.

திரு. கோ. விசுவநாதன் எம்.பி, அமைச்சர்கள் அன்பில் தர்மலிங்கம், ப. உ. சண்முகம், நாவலர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் பேசினர்.

நகர மக்கள் சார்பில் கலைஞருக்கு வெள்ளியால் செய்யப்பட்ட திருவண்ணாமலை கோயில் உருவம் பரிசாக அளிக்கப்பட்டது.

பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முதலமைச்சர் பரிசுகள் வழங்கிப் பேசினர்.

திருச்செங்கோட்டுக்குப் பேருந்து நிலையம்

ரூ. 34,000 செலவில் இடம் வாங்கப்பட்டது

திருச்செங்கோடு, செப். 30—

திருச்செங்கோடு நகராட்சிப் பேருந்து நிலையத்திற்காக திருச்செங்கோடு டவுன் ச.நெ. 91/3ஏ-ல் 1 63 ஏக்கர் அளவு திருச்செங்கோடு நகர ஆயிர வைசிய சங்க நந்தவனத்தை சங்ககிரி கோட்டாட்சித் தலைவரால் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, 13—9—71 காலை நகராட்சி ஆணையாளரிடம், ரெவினியூ அதிகாரிகளால் மேற்படி இடம ஒப்படைக்கப்பட்டது.

இந்த இடத்திற்காக நகராட்சியால் ரூ. 34,468.05 செலுத்தப்பட்டது.

நீண்டநாளாக பேருந்து நிலையம் இல்லாமல் இருந்தது; திருச்செங்கோட்டின் மையத்தில் உள்ள நகர ஆயிர வைசிய சங்க நந்தவனத்தைப் பொதுமக்களும் -- நகராட்சியும் சேர்ந்து கேட்டும் தர மறுத்துவிட்டார்கள்.

நகராட்சித் தலைவர் -- உறுப்பினர் -- ஆணையர் ஆகியோர் பெரு முயற்சி எடுத்ததன்பேரில், அந்த இடத்திற்காக ரூ. 34,468.05-வை நீதிமன்றம் மூலமாகச் செலுத்தப்பட்டது.

பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் துவக்கம்

முதன்முதலாக செங்கற்பட்டு மாவட்டத்தில் தொழு நோயாளிகட்கான விடுதி

காந்தி பிறந்த நாளில் கலைஞர் கருணாநிதி திறந்து வைத்தார்

சென்னை, அக். 4—

சென்னையிலிருந்து 50 கிலோ மீட்டர் (31 மைல்) தொலைவில் உள்ள பரனூரில் ரூ. 7 இலட்சம் செலவில் தமிழ்நாடு அரசு அமைத்துள்ள தொழு நோய் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லத்தை அக். 2-ம் நாளன்று முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசு தொழு நோய் பிச்சைக்காரர் மறுவாழ்வுக்காக 6 மறுவாழ்வு இல்லங்களை அமைக்கத் திட்டமிட்டு அவ்வாறு நிறுவப்பட்டுள்ள முதலாவது மறுவாழ்வு இல்லமாகும் இது.

முதல்வர் கருணாநிதி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:— "தர்மபுரி மாவட்டம் பரகூரிலும், தென்னாற்காடு மாவட்டம் உளுந்தூர்பேட்டையிலும்இதுபோன்ற மறுவாழ்வு இல்லங்களை அமைக்கும் வேலை இவ்வாண்டு இறுதிக்குள் முடிவடைந்துவிடும்; மற்றும் மூன்று இல்லங்களை அமைக்கும் வேலை அதற்குள் துவங்கி விடும்.

பரனூர் மறுவாழ்வு இல்லம் 8 கட்டிடங்களை கொண்டதாகும்; 250 பேர் தங்கலாம்; 750 பேர் தங்கும் வகையில் 24 கட்டடங்களைக் கொண்டதாக இந்த இல்லத்தை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதிக்கு இதுவரையில் ரூ. 46 இலட்சம் கிடைத்துள்ளது; அரசுப் பரிசு சீட்டுத் திட்ட வருவாயிலிருந்து ரூ. 43 இலட்சம் கிடைக்கும்."

அமைச்சர் சத்தியவாணிமுத்து

நிகழ்ச்சிக்கு அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து தலைமை வகித்தார்; இந்நிலையத்தில் உள்ள வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ளும்படி அவர் பிச்சைக்காரர்களை கேட்டுக் கொண்டார்.

"தமிழ்நாட்டில் 60,000 பிச்சைக்காரர்கள் உள்ளனர்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசுச் செய்திகள்
குத்தகை-
ஒப்பந்தப் புள்ளி
வேலைவாய்ப்பு-
விளம்பரங்கள்
அனைத்தையும்
அறிந்து கொள்ள
வாங்குங்கள்
தமிழரசு
தமிழ்நாடு அரசின்
திங்கள் இருமுறை ஏடு;
அரசினர் தோட்டம், சென்னை.2
விலை 35 காசு

'நவசக்தி' ஏட்டுக்கு ஆலய நிர்வாகிகள் மறுப்பு

குடந்தை திரௌபதியம்மன் கோவில் நிர்வாகஸ்தர்களாகிய மா. ந. நாகராச கொத்தனார், எஸ். செல்லையா கொத்தனார் ஆகியோர், 'நவசக்தி' ஆசிரியருக்கு எழுதியுள்ள கடிதத்தின் நகல் வருமாறு:—

'நவசக்தி' 22—9—71 இதழில், 'ஆதித்தன் வருகிறார் என்று அம்மன் ஊர்வலத்தை 5-மணி நேரம் நடுத்தெருவில் நிறுத்தினராம்' என்ற தலைப்பிட்டு வந்த செய்தி முற்றிலும் தவறானதாகும்.

இதுபோல் தவறான செய்தியை பத்திரிகையில் வெளியிட்டு எங்கள் நிர்வாகத்திற்கு ஊறு விளைவிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.

தாங்கள் எங்களது அனுமதி இல்லாமல் வெளியிட்ட மேலே கண்ட செய்திக்கு மறுப்பு தெரிவித்துக் கொள்கிறோம்.

19—9—71 அன்று எப்போதும் வழக்கம்போல் அம்மன் காலை 10 மணியளவில் புறப்பட்டு இரவு 12 மணியளவில்தான் கோவிலை வந்தடையும்; அதுபோலவே இவ்வருடமும் எவ்வித தாமதமும் -- தடையும் இல்லாமல் இரவு 12 மணிக்குக் கோவிலுக்கு வந்து சேர்ந்தது என்பதும் முற்றிலும் உண்மை. அம்மன் வரும்போது எந்தவிதமான கூட்டமோ, நிகழ்ச்சியோ நடந்துகொண்டு இருக்கவில்லை.

ஆகவே, இந்த மறுப்புச் செய்தியை -- உண்மையாக நடந்தவற்றை வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறோம். இம்மாதிரியாக இனி தவறுதலான செய்தியை வெளியிட வேண்டாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

காங்கிரசுக்காரர் மறுப்பு

மதுரை மாவட்டம் மணப்பச்சேரி கிராமக் காங்கிரசுக் கமிட்டித் தலைவர் சி. முத்துராமன் அறிவிப்பதாவது:—

"14—9—71 தேதிய 'நவசக்தி'யில், 'மணப்பச்சேரி அரிசனங்களின்மீது பயங்கரத் தாக்குதல்; தி. மு. க. வெறியாட்டம்' என்ற தலைப்பில், மணப்பச்சேரி பஞ்சாயத்துத் தேர்தல் காரணமாகவும் -- சாமி கும்பிடுதல் காரணமாகவும், வட்டச் செயலாளர் -- பஞ்சாயத்துத் தலைவர் -- ஊராட்சி ஒன்றியத் துணைத் தலைவர் ஆகியவர்களின் தூண்டுதலின்பேரில், தி. மு. க.-வினர் அரிவாள்--வேல்--கம்பு முதலிய பயங்கர ஆயுதங்களால் காங்கிரசு ஆதரவு அரிசனங்களைத் தாக்கியதாகச் செய்தியைப் படித்தேன்.

மேற்படி செய்தி அனைத்தும் உண்மைக்குப் புறம்பானவை; நான் இரண்டு ஆண்டுகளாக மணப்பச்சேரி கிராமக் காங்கிரசுத் தலைவராக இருந்துவருகிறேன்; மேலே கண்ட செய்திகள் தி. மு. க.-விற்கும்—காங்கிரசுக் கட்சிக்கும் நடந்த பிரச்சினையல்ல; பஞ்சாயத்துத் தேர்தலுக்கும்—சாமி கும்பிடுவதற்கும் இந்தச் சம்பவத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

31—8—71-ல் எங்களூரில் உள்ள அரிசனங்களுக்குள்ளே தகராறு ஏற்பட்டுக் கலகம் செய்து கொண்டார்கள்; போலீசார் தகவல் தெரிந்து வந்து, கலகம் செய்தவர்களைக் கைது செய்து வழக்குப் போட்டிருக்கிறார்கள்.

வட்டச் செயலாளரோ பஞ்சாயத்துத் தலைவரோ, ஒன்றியத் துணைத் தலைவரோ இந்த விஷயத்தில் தலையிடவும், தூண்டவுமில்லை.

8—9—71-ல் ஏழுமேர், தி. மு. கழகத்தைச் சேர்ந்த அரிசன இளைஞர் ஒருவரை அரிவாள் -- வேல் -- கம்பு கொண்டு தாக்க வந்தார்கள்; அவர்களைப் போலீசார் கைது செய்து வழக்குப் போட்டிருக்கிறார்கள்; இதில் போலீசார் ஒருதலைப் பட்சமாக நடக்கவில்லை.

பொதுமக்கள், 'நவசக்தி'யின் பொய்யான செய்தியை நம்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்."

தஞ்சையில் லெவி கொள்முதல் நிறுத்தம்

தமிழகம் முழுவதிலும் நெல், அரிசி நடமாட்டக் கட்டுப்பாடு நீக்கம்

உணவு நிலைமை திருப்திகரமாக இருப்பதையடுத்து நடவடிக்கை

தஞ்சாவூர், அக். 5—

"தமிழ்நாடு முழுவதிலும் இன்று முதல் அரிசி – நெல், கட்டுப்பாடுகள் இன்றித் தாராளமாக நடமாடலாம்.

மாவட்டங்களுக்கிடையில், நெல் – அரிசி நடமாட்டம், லெவி முறை ஆகியவை தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது"

என்று முதலமைச்சர் கருணாநிதி அவர்கள், இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; இத்தொடர்பில் அவர் விளக்கிக் கூறியதாவது :—

"தஞ்சை மாவட்டத்தில் நெல், அரிசி கொள்முதலுக்கு அல்லது நடமாட்டத்துக்கு இருந்து வரும் 25 சதவிகித லெவி முறையும், இதர மாவட்டங்களில் தற்போது இருந்துவரும் 15 சதவிகித லெவி முறையும் முழுவதுமாகத் திரும்பப் பெறப்படுகிறது.

"தமிழ்நாட்டில், நெல் — அரிசி நடமாட்டத்துக்கு எவ்விதக் கட்டுப்பாடும் இராது."

சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் லெவி ஏற்பாடு கொண்டு வரப்பட்டது. 1970-ம் ஆண்டு முற்பகுதியில் லெவி முறை நிறுத்தி வைக்கப்பட்டது; பின்னர், தஞ்சை மாவட்டத்திலும், இதர மாவட்டங்களிலும் 15 சதவிகித லெவி முறை கொண்டுவரப்பட்டது; இந்த லெவி அளவு தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 25 சதவிகிதமாகப் பின்னர் உயர்த்தப்பட்டது.

முதலமைச்சர் மேலும் கூறியதாவது :—

"தமிழ்நாட்டில் உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கிறது.

குறுவை அறுவடைக்கு அரசு நிர்ணயித்துள்ள விலைக்கும் குறைவாக நெல் விலை சரிவதற்கு அரசு அனுமதிக்காது

குறுவை அறுவடையின்போது உணவு கார்ப்பரேஷன் 75,000 டன் அரிசிக்குச் சமமான நெல் கொள்முதல் செய்து — தமிழ்நாடு அரசுக்கு 25,000 டன் அரிசிக்குச் சமமான நெல்லை வழங்கும்; இந்த ஏற்பாடு, நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் விலை நிலவரத்தைப் பாதுகாக்க உதவும்.

விவசாயப் பண்ணை விலைக் கமிஷன், தமிழ்நாட்டில் நெல் விலையை உயர்த்த சிபாரிசு செய்திருக்கிறது; தற்போது அதற்கு அவசியமில்லை; எதிர்காலத்தில் அவசியம் இருந்தால், அரசு இதைப் பற்றிப் பரிசீலனை செய்யும்."

13 மீனவர்களை காணோம்

கண்டால் கரை சேர்க்குமாறு கப்பல்களுக்குக் கட்டளை

சென்னை, அக். 5—

சென்ற மாதம் 22-ந் தேதியிலிருந்து சென்னையைச் சேர்ந்த 13 மீனவர்களைக் காணவில்லை.

மூன்று கட்டுமரங்களில் 22-ந் தேதி மாலை மீன் பிடிக்கச் சென்ற இவர்களுக்கு என்ன கதி ஏற்பட்டது என்று தெரியவில்லை.

சென்னைத் துறைமுகத்தை அடுத்துள்ள குப்பத்திலிருந்து புறப்பட்ட இவர்கள் கிழக்கு தென் கிழக்கு திசை நோக்கிச் சென்றதாகவும், அதற்குப் பிறகு திரும்பவில்லை என்றும் கூறப்படுகிறது.

இந்த மீனவர்கள் சாதாரணமாக 24 மணி நேரத்திற்குள் மீன் பிடித்துவிட்டுக் கரை திரும்ப வேண்டும்; 12 நாட்களாகியும் இவர்கள் இன்னமும் கரை சேரவில்லை.

சடந்த வாரம் கடல் கொந்தளிப்புக் காரணமாக இவர்கட்கு ஆபத்து ஏற்பட்டிருக்குமோ என அஞ்சப்படுகிறது.

காணாமற்போன இந்த மீனவர்கள் கடலில் தென்பட்டால் அவர்களைக் கரை சேர்க்குமாறு எல்லா கப்பல்களுக்கும் செய்தி அனுப்பப்பட்டிருக்கிறது.

மண்டபம் கடல் வள ஆய்வு நிலையத்துக்கு மீண்டும் ஆபத்து?

உறுதிமொழிகளுக்கு மாருக வேறிடத்துக்கு மாற்ற முயற்சி

அமைச்சர் சத்தியவாணி முத்துதரும் தகவல்

சென்னை, அக். 5—

"இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் உள்ள மத்திய கடல் வள ஆராய்ச்சி நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்ற மாட்டோம் — என்ற தலைமையமைச்சரின் உறுதிமொழிக்கு மாருகக் காரியங்கள் மறைமுகமாக நடைபெறுகிறது" என்று அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

"இந்த ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றும் மிகச் சாதாரண தொழிலாளர்கள் — குமாஸ்தாக்கள் போன்ற 42 பேர்களை ஏற்கனவே பம்பாய், கோவா போன்ற வெளி ஊர்களுக்கு மாற்றிவிட்டார்கள்; சென்ற வாரம் நான் மண்டபம் சென்றபோது மேலும் சிலரை மாற்றிவிட்டதாக என்னிடம் முறையிட்டுக்கொண்டனர்; உடனே இது குறித்து மத்திய அமைச்சர் பக்ருதீன் அலி அகமதுவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினேன்; தொழிலாளர்களையும் — குமாஸ்தாக்களையும் மாற்றி அனுப்பியுள்ள உத்தரவையாவது நிறுத்திவைக்க வேண்டும் என்று அவரிடம் கேட்டுக் கொண்டேன்; அவ்வாறே அந்த மாற்றல் உத்தரவுகளை நிறுத்தி வைக்க உத்தரவிடுவதாக மத்திய அமைச்சர் கூறியிருக்கிருர்" என்றும் அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"மண்டபத்தில் உள்ள கடல் வள ஆராய்ச்சி நிலையத்தைக் கொச்சிக்கு மாற்றும் யோசனை மத்திய அரசிடமிருந்து வந்தபோது, அதற்குத் தமிழக அரசு எதிர்ப்புத் தெரிவித்தது; 'ஆராய்ச்சி நிலையம் மண்டபத்திலேயே இருக்கும்; நிலைய இயக்குநர் அலுவலகமும், ஒரு சில ஊழியர்களும் மட்டுமே மாற்றப்படுவர்' என்று மத்திய அரசு கூறியது; அண்மையில்கூடத் தலைமை அமைச்சர், தமிழக முதலமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தில் இதை உறுதிப்படுத்தியிருக்கிருர்; என்றாலும், நேர்மாருகக் காரியங்கள் நடைபெறுகின்றன" என்று அவர் கூறினர்.

"ஆராய்ச்சி நிலையக் கூடாரம் போன்றவைகள்கூட எடுத்துச் செல்லப்படுவதாகத் தொழிலாளர்கள் என்னிடம் முறையிட்டனர்" என்றும் அவர் சொன்னர்.

மாவட்ட வளர்ச்சிப் பணிக்கு பரிசுச் சீட்டு வருவாயில் ஒரு பகுதி

தஞ்சையில் முதல்வர் கருணாநிதி அறிவிப்பு

உழவர்களுக்கு வீடு — மிராசுதாரர்களுக்கு வேண்டுகோள்

தஞ்சை, அக். 5—

'பரிசுச் சீட்டு மூலம் பெறப்படும் தொகையில் ஒரு பகுதி, மாவட்டங்களின் வளர்ச்சிப் பணிக்குப் பயன்படுத்தப்படும்"

என்று முதலமைச்சர் கருணாநிதி அவர்கள், இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"இணைப்புச் சாலைகள் அமைத்தல்—ஆரம்பச் சுகாதார நிலையங்களை ஏற்படுத்துதல் ஆகியவைகட்கு இந்நிதி பயன்படுத்தப்படும்" என்று அவர் தெரிவித்தார்.

நகர சொத்துக்களுக்கு உச்சவரம்பு விதிப்பு

மேலும் அவர், 'நகரச் சொத்துக்களுக்கு உச்சவரம்பு விதிப்பது பற்றி மாநில அரசின் கருத்தை இன்னமும் மத்திய அரசுக்குத் தெரிவிக்கவில்லை' என்றும் கூறினர்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"ஏழைகளுக்குப் பயன்படக் கூடிய எல்லா முன்னேற்ற நடவடிக்கைகளையும் கழக அரசு ஆதரிக்கும். நகரச் சொத்துக்களுக்கு உச்சவரம்பு கட்டுவது குறித்துப் பரிசீலிக்க நியமிக்கப்பட்டிருக்கும் மாநிலக் குழு, இன்னமும் தனது அறிக்கையைத் தரவில்லை; விரைவில் அது கிடைக்கும் என்று கருதுகிறேன்."

நிலக்கிழார்களுக்கு வேண்டுகோள்

தொடர்ந்து அவர் கூறியதாவது :—

"தஞ்சை மாவட்ட நிலச் சொந்தக்காரர்கள், தங்கள் உழவர்களுக்கு வீடு கட்ட நிலம் ஒதுக்கித்தர முன்வர வேண்டும். இதன் துவக்கமாக, நாகப்பட்டினத்தில் 100 இடங்களை — உழவுத் தொழிலாளர்களுக்காக — அப்பகுதி நிலச் சொந்தக்காரர்கள் ஒதுக்கியிருக்கிருர்கள்.

"அரசாங்கமே இது குறித்து நடவடிக்கை எடுக்க முடியும்; ஆனால், நட்ட ஈடு வழங்குவது போன்றவற்றுடன் நிர்வாக நடைமுறைச் சிக்கல்களும் சேர்ந்து காலதாமதத்தை ஏற்படுத்திவிடும் என்றுதான் அஞ்சவேண்டியிருக்கிறது; அதனாலேயே, நிலச் சொந்தக்காரர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன்."

தெருவில் பிச்சைக்காரர்களே இல்லாத நிலை

வேலூர் வர்த்தகர் சங்க வரவேற்பில் கலைஞர் அறிவிப்பு

வேலூர், அக். 5—

முதலமைச்சர் கருணாநிதி, உணவு அமைச்சர் ப. உ. சண்முகம், வேளாண்மை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் ஆகியவர்களுக்கு வேலூர் வெல்ல வர்த்தகர்கள் சங்கம் வரவேற்பு அளித்தது.

வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில முதலமைச்சர், 'வறுமையையும் — வேலையில்லாத் திண்டாட்டத்தையும் எதிர்த்து நடவடிக்கைகளை எடுக்கும் அரசாங்கத்திற்கு எல்லோரும் ஒத்துழைப்புத் தரவேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

பிச்சைக்காரர் நிவாரண நிதிக்கு ரூ. 10,100 அளிக்கப்பட்டது; முதலமைச்சர் அதற்கு நன்றி தெரிவித்தார்.

"தொழுநோய் பீடித்துள்ள பிச்சைக்காரர்களுக்கு இருப்பிடம் அளிக்கத் துவக்கத்தில் ஆறு விடுதிகள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது' என்று முதல்வர் கூறினர்.

"இன்னும் ஆறு ஆண்டுக் காலத்தில் தமிழ்நாட்டின் தெருக்களில் பிச்சை எடுக்கும் பிச்சைக்காரர்களே இல்லாத நிலை உருவாகும்" என்று அவர் சொன்னர்.

"வெல்ல வர்த்தகர்களின் கோரிக்கைகளை அரசு பரிசீலிக்கும்" என்று உறுதி கூறினர்.

பொதுப்பணித் துறை அமைச்சர்

எஸ். ஜே. சாதிக்பாட்சா

நிகழ்ச்சிகள்

அக். 6 காலை 9 மணி: நெல்வாய் — தண்டலம் பம்பக்கால்வாய் பார்வையிடல்; 10 மணி: பரந்தூர் பம்பக் கால்வாய் மேம்பாலம் கட்டும் இடம் பார்வையிடுதல்; 11-30 மணி: தாமல் ஏரி வரவு கால்வாய் — ஏரியை ஆழப்படுத்த இடம் பார்வையிடுதல்; பிற்பகல் 12-30 மணி: வாலாசாபாத் ஊராட்சி ஒன்றிய விவசாயக் கிடங்கு திறப்பு; 1 மணி: வாலாசாபாத் ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; மாலை 4 மணி: இளையனூர்வேலூர் பள்ளிக் கட்டடத் திறப்பு; 6 மணி: ஆற்பாக்கம் தி.மு.க. கிளை துவக்க விழா; இரவு 7-30 மணி: தென் [illegible]—அண்ணா பிறந்த நாள் [illegible] பொதுக்கூட்டம்.

அக். 7 முற்பகல் 11 மணி: [illegible]வலக்கல்நத்தம் நீர்த் தேக்கம் அடிக்கல் நாட்டுதல்; பிற்பகல் 12-30 மணி: வெலக்கல்நத்தம் பள்ளிக் கட்டடத் திறப்பு; 3 மணி: மல்லப்பள்ளி ஊராட்சி மன்றக் கட்டடத் திறப்பு; 3-30 மணி: [illegible]வெப்பல்நத்தம் பள்ளிக் கட்டடத் [illegible]றப்பு; மாலை 4 மணி: சோலையார் [illegible]டை பெண்கள் உயர்நிலைப் பள்ளித் திறப்பு; 5 மணி: திருப்பத்தூர், ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 6-30 மணி: திருப்பத்தூர் — பொதுக்கூட்டம்.

தொழிலாளர் நல அமைச்சர்

என். வி. நடராசன்

நிகழ்ச்சிகள்

அக். 6 காலை 3 மணி: திண்டிவனம் நகராட்சி வரவேற்பு; 4 மணி: அறியந்தாங்கல் பள்ளித் திறப்பு; 4-30 மணி: கந்தாடு காலனி தி.மு.க. கிளைத் திறப்பு; 5-30 மணி: மரக்காணம் ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 6-30 மணி: மரக்காணம் தி.மு.க. பொதுக்கூட்டம்.

அடிக்கல் நாட்டு விழா

சைதைத் தொகுதி கலைஞர் கருணாநிதி நகரில குடிசைப் பகுதி மாற்றுத் திட்ட அடிக்கல் நாட்டு விழா, 6-10-71 மாலை 6-மணிக்கு காஞ்சி மணிமொழியார் தலைமையிலும்—முரசொலி மாறன் எம்.பி. முன்னிலையிலும் நடைபெறும்; டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் அடிக்கல் நாட்டுவார்; இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ. வரவேற்புரையாற்றுவார்.

பவானியில் பாராட்டு விழா

'இராவண காவிய'த்திற்குத் தடை நீக்கிய தமிழக அரசிற்குப் பாராட்டும், 'இராவண காவியம்' இயற்றிய புலவர் குழந்தைக்குப் பொன்னாடை போர்த்து விழாவும், 6—10—71 காலை 9 மணிக்கு பவானி இராயல் திரையரங்கில் நடைபெறும்; திரு. எஸ். எஸ். எம். சுப்பிரமணியம் தலைமை வகிப்பார்; தந்தை பெரியார் அவர்கள், புலவர் குழந்தைக்குப் பொன்னாடை போர்த்துவார்; பெரியாருக்கு திரு. பி. என். அப்பாசிக் கவுண்டர் பொன்னாடை போர்த்துவார்; தோழர்கள் ஜி. எஸ். இராமு, பி. ஏ. சாமிநாதன் எம்.பி., க. அன்பரசு, மு. இராமநாதன் எம்.எல்.சி., ப. தி. சாமிநாதன், திருமதி விசாலாட்சி அம்மையார் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

6—10—71

தென்னேரி

காஞ்சி வட்ட தி.மு.க. சார்பில் அண்ணா பிறந்தநாள் விழா; இரவு 9 மணிக்கு; தலைவர்: டி. சீனிவாசன்; பேசுவோர்: அமைச்சர் எஸ்.ஜே. சாதிக் பாட்சா, சி. சிட்டிபாபு எம்.பி, சி.வி. இராசகோபால் எம்.எல்.சி., சி. வி.எம். அண்ணாமலை எம்.எல்.ஏ., எம். கோபால் எம்.எல்.ஏ., கே.எம். இராசகோபால் எம்.எல்.ஏ., கே.டி.எஸ். மணி, ஆர். கோபால், டி. குலசேகரன், வெ. கன்னியப்பன், சா. கிருட்டினன், டபுள்யூ. கே. இரத்தினவேலு, என்.ஆர். முனிரத்தினம், கே.வி. நெடுஞ்சேரன். (இரவு 10 மணிக்கு 'முரசு கொட்டும் முதல்வன்' என்ற நாடகம் நடைபெறும்.)

பவானி

நகர தி.மு.க.—பகுத்தறிவு மன்றம் ஆகியவை சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா; மாலை 7 மணிக்கு கலைஞர் திடலில்; தலைவர்: இரா. துரை; பேசுவோர்: தந்தை பெரியார், புலவர் குழந்தை, பி.ஏ. சாமிநாதன் எம்.பி., எஸ்.எஸ்.எம். சவுண்டப்பன், ஜி.என். இராசு, வி.வி. இராமு, ஏ.எம். இராசா எம்.எல்.ஏ., ஜி.பி. வெங்கிடு எம்.சி., பு.கா. பழனியப்பன், மு. நாகராசன், எம்.பி. முத்துசாமி, ப.சி. கிருட்டினசாமி, திரு. ஜேசுரத்தினம் பெரியார் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்துவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (34, [illegible] தெரு, சென்னை-18) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.